Registered as a Newspaper at the G. P. O. 60 சதம்

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
2-6-81ல புதிய வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன.
SHORT HAND & TYPING
BOOK-KEEPING
RADIO AND ELECTRONICS
TELE COMMUNICATIONS
LOND EXAM
G C E. A/L 82/83
தாவரவியல்: — சிவவீரசிங்கம்
விலங்கியல்: — ஜெகானந்தகுரு
இரசாயனம்: — அன்ரன்மாஸ்ரர்
கணக்கியல் — பாலாமாஸ்ரர்
பௌதிகம், தூய, பிரயோக கணிதம்
பிரபல ஆசிரியர்கள்
விபரங்கட்கு:
V. M. PACKKIYANATHAN

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 வைகாசி: 13 றஜபு பிறை 21 இதழ் 105
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-5-1981

## இளைஞர் கைது

(பண்டத்தரிப்பு)

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி தியாகராசா துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானது தொடர்பாக வட்டுக்கோட்டை பிளவத்தை எனுமிடத்தைச் சேர்ந்த வீரசிங்கம் ராஜேந்திரன் எனும் இளைஞர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளார்.

சங்கானைப் பொலிசாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட இவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

# முன்னாள் வட்டு எம்.பி. 'தியாகர்' துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

## சைக்கிளில் வந்த இளைஞர் பல தடவைகள் சுட்டாராம்

### ஜீப்சாரதி உட்பட இருவர் காயம்;

(யாழ்ப்பாணம்)

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி.யும், மாவட்டசபை ஐக்கிய தேசியக்கட்சி முதல் வேட்பாளருமான கலாநிதி ஆறுமுகம் தியாகராசா, நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, நேற்றிரவு ஏழு மணி ஐம்பது நிமிடமளவில் காலமானார். அவருக்கு வயது அறுபத்து ஐந்து.

ருத்தலடி எனுமிடத்தில் ஐக்கியதேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துவிட்டு 'ஜீப்'பில் ஏறி அமர்ந்ததும் சுமார் பத்தரை மணி பளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான கலாநிதி ஆ. தியாகராசா, நேற்று முன்தினமிரவு சுமார் பதினொன்றரை மணிபளவில் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அனுமதிக்கப்பட்ட ஒருமணி நேரத்துக்குள் அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நண்பகல்வரை சுயநினைவு இழந்த நிலையில்காணப்பட்ட கலாநிதி தியாகராசாவுக்கு நேற்று மாலை ஓரளவு நினைவு திரும்பியதாகவும் மனைவியுடன் ஏதோ பேச முயன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கலாநிதி தியாகராசா நேற்றிரவு 7-50க்கு காலமானார்.

### முன்னாள் எம். பி.

1979ம் ஆண்டு பொதுத்தேர்தலில், இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் வட்டுக்கோட்டை தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர் 75ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்.

இவ்விபின்னர் 1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு 18,20 வாக்குகளால் தோல்வி பெற்றார்.

அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறும் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி சார்பில் இக்கட்சியின் முதல் வேட்பாளராகத் தெரிவானார்.

### கலாநிதிப்பட்டம்

இவர் அண்மையில்தான் இந்திய பல்கலைக்கழகமொன்றில் பொருளாதாரத் துறையில் கலா நிதிப்பட்டம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்

(8-ம் பக்கம் பார்க்க)

## குண்டு அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த கலாநிதி தியாகராசாவின் உடலிலிருந்து சத்திர சிகிச்சையின் பின்னர் குண்டுஒன்றுநேற்று எடுக்கப்பட்டது.

கலாநிதி தியாகராசா 4ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆயுதம்தரித்த பொலிசார் காவல்புரிந்து வருகின்றனர். நேற்று முன்தினமிரவு மாவட்ட அமைச்சர் திரு. யு. பீ. விஜயக்கோன் சென்று பார்வையிட்டார். நேற்றுக்காலை கலாச்சார அமைச்சர் திரு. ஹுருள்ளே அவரைப் பார்க்க வந்திருந்தார்.

(8-ம் பக்கம்பார்க்க)

## ஆறு இளைஞர்கள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ஆ. தியாகராசா துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக நேற்று ஆறு இளைஞர்கள் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

(க)

REQUIRED URGENTLY
FOR SINGAPORE

50 Female English Speaking Workers in the 17 — 32 years age group for American Owned Factory. Attractive salary and fringe benefits including dormitory facilities provided.

Required urgently for expanding metal company.

(i) 3 Experienced Foundry Workers.
(ii) 2 Machinists with at Least 3 years experience in Lathe Machines.

Contact :-

P. N. Krishnadasan & Co.,
College Road,
Kankesanturai.

LABOUR LICENCE
9287

9299

விற்பனைக்கு

★ அஸ்பெஸ்ரஸ் கூரைசீற்றுகள்:
4/80 ச. அடி

★ லோலெவல் சூட்ஸ்
(Low Level Suite Twyfords)
-Complete set 2475/-

★ கம்பிகள்
சகல அளவுகளிலும் 3/8'', 5/8'' - 520/- 50 K g
1/2'' -540/- 50 K g

★ பட்டங்கள்
சகல அளவுகளிலும் 520/- 50 K g

★ 'ப' இரும்புகள்
4''X2'' - 40/50 அடி
6''X3'' - 60/50 அடி

★ கோண இரும்புகள்
1 1/4X1 1/4X1/8 - 135/- 20' இரும்பு
2'' X2''X1/4 - 577/50 - 50 K g

★ முறுக்குக் கம்பி
சகல அளவுகளிலும் 520/- 50 K g

மேலும் உங்களுக்குத் தேவையான
இரும்பு பிளேட்டுகளும்
இரும்புச் சாமான்களையும் கட்டிடப்
பொருட்களையும் விவசாய உபகரணங்களையும்
எமது ஸ்தாபனத்தில்
உங்கள் தேவைகளுக்கேற்ப எப்பொழுதும்
பெற்றுக்கொள்ளலாம்.

மஸ்கன்ஸ் லிமிட்;

35, ஸ்ரான்லி வீதி -- யாழ்ப்பாணம்

(9297) தொலைபேசி: 8221

## வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

மாம்பலகை ருக்கைகள், வாங்கு, மேசைகள் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும். விலை விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். பரணி தச்சுத்தொழிற்சாலை மானிப்பாய்வீதி, ஆனைக்கோட்டை. 9226

### காணவில்லை

யாழ்ப்பாணம்கே. கே. எஸ் வீதி (இல; 224) லக்சுமி ஜுவலரியில் வேலை பார்க்கும்பொன்னுத்துரை-பாலசுப்பிரமணியம் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் வண்டி ரசீது, இன்சூரன்ஸ் பத்திரங்களும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் உள்ள விலாசத்தில் வந்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 9294


### கவிராயர் காலமானர்

சென்னை, மே 25

உடுமலை நாராயண கவிராயர் காலமானர்.

இவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தி. மு. க தலைவர் திரு. மு. கருணநிதி செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.


**SALES GIRL**

Wanted for immediate employment a Sales Girl for Reputed Firm in Jaffna. Experience in Sales work and maintaining Stock Cards preferable. Knowledge of English Typing essential Apply giving particulars with copies of testimonials.

**484, Hospital Road, Jaffna.**

'சிசில்' குளிர்சாதனப் பெட்டிகள்
('SISIL' REFRIGERATORS)
உங்களுக்குத் தேவையான பெட்டிகள்
உடனடியாக பெற்றுக்கொள்ள
வாய்ப்பு உள்ளது.
சொற்ப தொகையே கையிருப்பில்
உள்ளதால் உங்கள் தேவைக்கு
முந்துங்கள்

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.**
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 234


## 31ம் நாள் நினைவு அஞ்சலி



செல்வி குகாயினி சண்முகலிங்கம்
(மாணவி)
(திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்)
தோற்றம்: 10-5-1964 -- மறைவு: 26-4-1981

எமையெல்லாம் ஆற்ருெணுத்துயரில் ஆழ்த்தி விட்டு எமை பிரிந்து வானுலகு எய்திய எமது தெய்வமே! எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது உம் பிரிவால் வாடுகிறேும்-

அன்புத்தாயார், சகோதர, சகோதரிகள், உறவினர்
சுருவில், ஊர்காவற்றுறை. 9292

# "பெண்களை அபலைகளாக, வலிமையற்றவர்களாகக் கருதி கவிபாடுவது தவிர்க்கப்பட வேண்டும்"

## ஐங்கோண கவிஅரங்கில் பல்கலைக்கழக விரிவுரையாளர்

(யாழ்ப்பாணம்)

"இன்றைய காலகட்டத்தில், கவிஞர்கள், பெண்களை அபலைகளாக—பரிதாபத்திற்குரியவர்களாக—சீதனக்கொடுமையால் நலிவுறுபவர்களாக-வலியைற்றவர்களாக கருதித் தமது சிந்தனையை வளர்த்து கவிபாடும் நிலைமை தவிர்த்துக் கொள்ளவேண்டும். பெண்களுக்கு பல்வேறு பிரச்னைகள் இன்றுண்டு. எனவே ஒவ்வொரு கவிஞனும், தன் எண்ணங்களை விசாலித்து கவிபாடும் பட்சத்திலேயே அது ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கும், சமுதாயத்திற்கும் பயனளிக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறை விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு, நேற்று முன்தினம் மாலை இலங்கை, கலை இலக்கிய நண்பர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த ஐங்கோண இலக்கிய அரங்கில், "நித்திய கல்யாணி" என்ற கவிதைத் தொகுதி நூலை அறிமுகம் செய்துவைத்து, விமர்சனம் செய்கையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள போஸ்ட் இன்ஸ்ரிரியூட் மண்டபத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ் துறை விரிவுரையாளர் நா, சுப்பிரமணிய ஐயர் தலைமையில் இந்த இலக்கிய அரங்குஇடம் பெற்றது.

திருமதி சித்திரலேகா மௌனகுரு மேலும் உரையாற்றுகையில், 'இலக்கியங்களுக்குமூலம் பொருள் சொற்கள் சொற்களை நாம் பயன்படுத்தும் போது செறிவு, இறக்கம் எளிமைமிக்கதாக பயன்படுத்தின் அந்த இலக்கியம் பூரணத்துவம்மிக்கதாக அமையும்" என்றார்.

இலங்கை அவைக்காற்றுக் கழகத்தின் நாடகநெறியாளர் திரு. கே. பாலேந்திரா, சிறப்புரையாற்றுகையில் "நாடகம் நல்ல முறையில் அமையவேண்டுமானுல் நாடக நடிகர்களுக்குச் சிறந்த பயிற்சி அவசியம். இவர் நடிப்பதற்குப் பயிற்சி தேவையா? ஏதோ மேடையில் ஏறி நடிப்பது தானே என்று பேசுகிருர்கள். தாம் மனனம் செய்த வசனங்களை ஒலிவாங்கியின் முன்னுல்பேசிப் பழகுவதற்கு நாடகமேடையைப் பயன்படுத்துவதனுல் தான்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர், திரு. மு நித்தியானந்தம், 'தீர்த்தக்கரை' சஞ்சிகையை விமர்சித்து உரையாற்றுகையில் "எழுத்தாளர்கள், ஆபிரிக்க கண்டத்தை, இருண்ட கண்டம் என வர்ணிப்பதால், நாம் இன்னும் காலனித்துவ ஆட்சி முறையில் இருந்து விடுபடவில்லை என எண்ணத் தோன்றுகிறது", என்ருர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர், ஜனுப் எம். ஏ. நுஃமான், "மேகம்" சஞ்சிகையை விமர்சிக்கையில், இன்று, பிரசுர செலவினங்கள் கட்டுக்கடங்காத நிலையிலும்' பத்துச்சஞ்சிகைகள் இலங்கையில் தொடர்ந்து வெளிவருகின்றன. இது எமது இலக்கிய வளர்ச்சிக்கு பெருமையளிக்கின்றது. என்ருர்.

"வாகை" சஞ்சிகையை விமர்சித்த எழுத்தாளர். திரு. டானியல் அன்ரனி 'வாகை' தனது எழுத்தாற்றல். ஒருவட்டத்துள் நிறைவு செய்திருந்தாலும், காலப் போக்கில், நல்ல ஆரோக்கியமான இலக்கியங்களை, சிருஷ்டிக்கதவுறுது என்ருர்.

ஆசிரியை சிவமலர் செல்லத்துரை உரையாற்றுகையில் "புதிய படைப்பாளிகளது ஆக்கங்களை விமர்சனம் செய்பவர்கள், அவற்றை மோசமாகக் குறை கூறுவதனுல் அது அவர்களது வளர்ச்சிக்கு தடைவிதிப்பதாக அமைந்துவிடும். அந்நிலைமை கத்தி முனையில் நின்று விமர்சிப்பது இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் என்பது உண்மைதான். ஆனுல், புதிய படைப்பாளிகளது மனம் நொந்து, அடுத்த படைப்புகளை தோற்றுமல் இருப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கூடாது" என்ருர்.

விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நூலாசிரியர்களும் இறப்புரையாற்றினர். (இ)

யாழ். மாவட்டத்தில்

## நீர்ப்பாசன வேலைகள்: ரூபா 4 லட்சம் ஒதுக்கீடு

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் சிறிய நீர்பாசனவேலைகளை மேற்கொள்வதற்காக இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நான்கு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை யாழ் மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு கே. பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இச்சிறிய நீர்பாசனத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திலுள்ள குளங்களும் வாய்க்கால்களும் துரிதமாக புனரமைப்புச்செய்யப்பட்டு வருகின்றன அத்துடன் இம்மாவட்டத்திலுள்ள சகல கமநல சேவைப்பகுதிகளிலும் இருக்கும் ஒவ்வொரு குளங்கள் வாய்க்கால்களினுல் தற்போது பயனடைந்துவரும் விவசாயிகள் தொகைபற்றிய விபரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன. (இ)

## இறந்த நிலையில் கயிற்றில் தொங்கிய 21வயது வாலிபர்!

### வயோதிபர் காவலில்

(புலோலி)

இறந்த நிலையில் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த வாலிபரின் மர்மமரணம் சம்பந்தமாக வயோதிபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த துன்னலை வடக்கு என்னுமிடத்திலேயே இம்மர்ம மரணம் சம்பவித்துள்ளது. இராசா இராஜகோபால் (வயது21)என்பவரே இம்மர்ம மரணத்திற்குள்ளானவராவார், இவ்வாலிபரின் மர்மமரணம் சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட சிதம்பரம்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 50) என்ற வயோதிபரே விளக்கமறியலில் வைக்கப்பட்டவராவர்.

துன்னலைவடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்குஅருகாமையில் இறந்த நிலையில் வாலிபரொருவரின் சடலம் கயிற்றில் தொங்கிக் கொண்டிருப்பதாகப் பருத்தித்துறைப்பொலிசாருக்குத் தகவல் ஒன்று கிடைத்தது. விதைத்திற்குச் சென்ற பொலிசார் கயிற்றிற் தொங்கிக் கொண்டிருந்த வாலிபரின் சடலத்தை மீட்டனர். இம்மர்ம மரணம் சம்பந்தமான மரணவிசாரணையை திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. தி. வேலுப்பிள்ளை மேற்கொண்டார்.

இறந்தவரின் சகோதரியான விஜயரத்தினம் பாக்கியம்சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

இறந்தவர் எனது தம்பி. சம்பவதினம் பகல் ஒரு மணிபோல் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவர் எங்கள் வீட்டிற்குவந்து எனது தம்பியைத் தேடினுர். நான் தம்பி இங்கே இல்லை என்று சொன்னேன். அப்போது அவர் உன்ரை தம்பியைத்திருத்திக்கொள் திருத்தாவிட்டால் நான் திருத்திக்கொள்கிறேன். அவன் எனது மகளுடன் சேஷ்டைகள் விடுகிருன்" என்று சொல்லிச் சென்ருர். பின்பு திரும்பவும் 4 மணி போல் சுப்பிரமணியம் வீட்டிற்கு வந்து தம்பியைத் தேடினுர். நான் அப்போதும் தம்பி இவ்விடமில்லையென்று சொல்லேன். தம்பி வழக்கமாக இரவு 10 மணிக்கே வீட்டிற்கு வருவார். ஆனுல் அன்றையதினம் எனது தம்பி வீட்டிற்குத் திரும்பி வரவில்லை. அடுத்தநாட் காலை ஆறுமணியளவில் தம்பி கயிற்றில் சுருக்கிட்டபடி தொங்குவதாகக் கேள்விப்பட்டு குளறிக்கொண்டு ஓடிச்சென்று பார்த்தபோது எனது தம்பி கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தார். தம்பி கொலைசெய்யப்பட்டிருக்கலாமென்றே கருதுகிறன்,'

மரண விசாரணை அதிகாரி பகிரங்கத்தீர்ப்பு வழங்கி தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

இவ்வாலிபரின் மர்மமரணம்சம்பந்தமான புலன்விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் சந்தேகத்தின் பேரில் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 50) என்ற வயோதிபரைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது நீதவான் சந்தேகநபரான வயோதிபரை அடுத்தமாதம் 4ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். [இ]

## மென்பந்து கிரிக்கட் போட்டி

(யாழ்ப்பாணம்)

அராலி மானத்தை பொது விளையாட்டு மைதானத்தில் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் இருக்கும் விளையாட்டுக் கழகங்களிற்கிடையிலான மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி நடைபெற்றுவருகிறது.

வலி-மேற்கு விளையாட்டுஉத்தியோகத்தர் திரு. அரிச்சந்திராவினுல் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டி அடுத்த மாதம் 13ம் திகதி நடைபெறும் இறுதிப்போட்டியுடன் முடிவடையும்.

இவ்வேளை மாவத்தை பொது விளையாட்டு மைதானத்தை பயிற்சி நிலையமாக மாற்றி விளையாட்டு உத்தியோகத்தர் திரு. அரிச்சந்திரவின் முயற்சியினுல் விளையாட்டுப்பயிற்சி வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. (செ)

## பொன்மணி மீண்டும் நியமனம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக திருமதி பொன்மணி குலசிங்கம் மீண்டும் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருமதி குலசிங்கம்விசாரணையின் பொருட்டு கடந்தமாதம் 7ம் திகதி முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார்.

சேவை இரண்டுக்கு இவர் வழக்கம்போல் பொறுப்பாகவிருக்கிருர். சேவை ஒன்று மேலதிகப்பணிப்பாளர் திருமதி ஞானம் இரத்தினத்தின் பொறுப்பின் கீழ் உள்ளது. (ம)

# “மாவட்ட சபையைக் கைப்பற்றினால் அபிவிருத்தி, வேலைகளுக்கு அரசிடம் கையேந்தத்தேவையில்லை”

## மண்டைதீவில் யோகேஸ்வரன்

(மண்டைதீவு)

“தமிழர் விடுதலைக் கூட்டணிவேட்பாளர்கள் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் வெற்றி பெற்றால், பதவிகளுக்கும், அபிவிருத்திகளுக்கும், வேலைவாய்ப்பு பெறுவதற்கும் நாம் இன்றைய அரசிடம் கையேந்தத் தேவையில்லை. எங்களுக்குத் தேவையான அபிவிருத்திகளை நாமே செய்வதற்கு வாய்ப்புக் கிட்டும்.”

இவ்வாறு மண்டைதீவு சிறப்புலம் மைதானத்தில் நடந்த கூட்டணிப் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரன் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

“ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தங்கள் அமைச்சர்களாக இரண்டு பேரை வைத்துக்கொண்டு ‘தமிழர்களுக்கு அந்தஸ்து கொடுத்துவிட்டோம்’ என்று உலக நாடுகளில் கூறி வருகின்றது.

“கொள்கை இல்லாதவர்கள் அபிவிருத்தியைப் பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதியிருக்கின்றது. இளைஞர்கள் திரண்டு எமது இயக்கத்தை பலப்படுத்த வேண்டும். எமது ஒற்றுமையை வளர்க்க நாம் எல்லோரும் உழைக்க வேண்டும்.

“ஐக்கிய தேசிய கட்சிக்கு நாம் நல்ல பாடம் புகட்ட வேண்டும். எதிர்வரும் 9-ம் திகதி நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத்துக்கு நாம் தலைநிமிர்ந்து செல்ல வேண்டும்” என்று குறிப்பிட்டார். (ஈ)

# “கிழக்கில் கூட்டணிக்கு பெரும் வெற்றி கிடைக்கும்”

## — கூட்டணித் தலைவர்

(அரியாலை)

“ஆங்கில ஆட்சி இந்த நாட்டில் முடிவடைந்த பின்னர் சிங்கள மக்கள் ஆளும் இனமாகவும் தமிழ் மக்கள் இந்நாட்டில் ஆளப்படும் இனமாகவும் மாறினர். தமிழ் மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வு - சாதிபேதம் என்பன இருக்கக்கூடாது. நாம் எல்லோரும் தமிழ்மக்கள் என்ற ரீதியில் வாழவேண்டும்”.

இவ்வாறு கலைமகள் வட்டாரத்தில் கலைமகள் வீதியில் அமைந்த மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் கூட்டணி பணிமனைத் திறப்பு விழாவில் வேட்பாளர் திரு. சி நாகராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் நடராசா தலைமையில் நடைபெற்ற பணிமனைத் திறப்பு விழாவில் திரு சி. நாகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; “ஐக்கிய தேசிய கட்சி தமிழ்மக்களுக்கு எதிரானது. ஒரு சிலருக்கு உத்தியோகம் தருவதாகக் கூறி ஆசைகாட்டி வாக்களிக்கும்படி கோருகிறார்கள். இவர்களது ஆட்சியில்தான் தமிழ் மாணவர்கள் வாலிபர்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் பெரும் அநீதி விளைவிக்கப்பட்டு வருகிறது. இவர்களை நம்பி தமிழ் மக்கள் ஏமாந்து போகக் கூடாது” என்றார்.

தேர்தல் பணிமனையைத் திறந்து வைத்த கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

“மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் நடைபெறும் அபிவிருத்தி சபைத்தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி முழு அளவில் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

“அம்பாறை மாவட்டத்தில் நாம் நடத்திய கூட்டங்களில் பெரும் தொகையான முஸ்லிம் பெண்கள் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். கூட்டணி போட்டியிடும் ஏழு மாவட்டங்களிலும் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெறக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன” என்றார். (ஈ)

# “பட்டியல் மாற்றம் பற்றி உத்தியோக பூர்வமாக கூட்டணி அறிவிக்காததேன்?

## — குமார்

(யாழ்ப்பாணம்)

“தமிழ்க்காங்கிரஸ் மாவட்ட சபைக்கு தற்போது சமர்ப்பித்துள்ள வேட்பாளர் பட்டியலை, தேர்தல் முடிந்ததும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவின்படி, கிடைக்கும் விகிதாசார வாக்குத் தொகையின்படி மாற்றம் என்று அறிவித்தோம். இதன்பின் கூட்டணியினரும், பட்டியலை மாற்றப்போவதாக கூறுகிறார்கள். அப்படியானால் கூட்டணி செயலாளர்நாயகம், இது பற்றி ஏன் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை.

ஏழாலையில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார். திரு. எஸ். தியாகராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

“யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. மாவட்டசபை வேட்பாளர் பட்டியலில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒருவராக 14 வேட்பாளரை நியமித்தோம். அதன்படிதான் பிரசார வேலைகள் நடைபெற்று வருகிறது.

கூட்டணியினரும் இதே போல் தேர்தல் முடிந்தபின் கூடியவாக்குகள் எடுப்பவருக்கு முன்னிடம் கொடுத்து பட்டியலை மாற்றப்போவதாக கூறுகிறார்கள் இது ஒரு ஏமாற்றாகும். ஏனெனில் கோப்பாய் தொகுதியில் கூட்டணி 2வேட்பாளரை நிறுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்திலும் 2 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இதேபோல் வட்டுக்கோட்டையிலும் 2 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இந்த 3 தொகுதிகளிலும் கிடைக்கும் வாக்குகளை வைத்துக்கொண்டு ஒவ்வொரு தொகுதியிலும் யாருக்கு முன்னிடம் கொடுக்கப்போகிறார்கள்? யாழ்ப்பாணத்தில் கூட்டணிக்கு கிடைக்கும் வாக்குகளை எப்படி 2வேட்பாளர்களுக்கு பிரிக்கபோகிறார்கள்? இது நடக்கக்கூடியதா? ஒவ்வொரு தொகுதியிலும் கூடிய வாக்குகளைப்பெற கூட்டணியினரின் தந்திரமாகும். இதில் கூட்டணி வேட்பாளர்கள் மட்டுமன்றி வாக்காளரும் ஏமாறப்போகிறார்கள். இப்படியேதான் கூட்டணியினர் தமிழ்மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

“மாவட்ட சபைக்கு, கிராம சபைக்கு உள்ள அதிகாரம் மட்டும்தான் இருக்கும். இந்த அதிகாரங்களை, மாவட்ட அமைச்சர், சம்பந்தப்பட்ட அமைச்சர், ஜனாதிபதி ஆகியோரின் அனுமதியுடன்தான் பாவிக்கலாம் இம்மூவரும் சிங்களக் கட்சியைச்சேர்ந்தவர்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல் களம்

# “தமிழ் ஈழத்திற்காக கூட்டணி உலக நாடுகளின் ஆதரவை எதிர்நோக்கிச் செயற்பட்டு வருகிறது”

## அல்வாயில் அமிர்தலிங்கம்

(உடுப்பிட்டி)

“ஜனாதிபதி, திருமலையிலுள்ள தமிழர்களுக்கு வந்தேறு குடிகள் என்ற நாமகரணம் சூட்டியுள்ளார் பொறுப்பான பதவி வகிக்கும் ஒருவர் பொறுப்பற்ற முறையில் இப்படிப்பேசலாமா?”

இவ்வாறு எதிர்க் கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் அல்வாய் மாலி சந்திப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: “இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தமிழ் மக்களது உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டுவந்தன. எஞ்சியிருந்த உரிமைகளும் 1972ல் புதிய குடியரசு அரசியலமைப்புச் சட்டத்துடன் பறிக்கப்பட்டது. இதன் பின்னரே தமிழினம் தீர்க்கமான முடிவுக்கு வந்து கூட்டணியை அமைத்தது.

“தமிழ் மாணவர்கள் பரீட்சையில் கூடுதலான புள்ளிகள் எடுப்பதற்கு பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் தமிழ் விரிவுரையாளர்கள் உதவி செய்கின்றார்கள் என்று அமைச்சர் சிறில் மத்தியூ தமிழ் மக்கள்மீது அபாண்டமான குற்றம் சுமத்தினார். இப்படித் தமிழ் மக்களைக் கேவலமாகப் பேசும் சிறில்மத்தியூ போன்றவர்களைக் கொண்டு விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கா தமிழ் மக்கள் வாக்குப்போடப் போகின்றீர்கள்?

“தமிழ் ஈழத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தமிழர் விடுதலைக் கூட்டணி உலக நாடுகளின் ஆதரவை எதிர்நோக்கிச் செயற்பட்டு வருகின்றது. அரசாங்கமோ அதற்கு எதிராக எதிர்ப்பிரசாரம் செய்து வருகின்றது”

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் ஆகியோர் உட்பட பலர் பேசினார்கள்.

இலங்கையில் நாடகவளர்ச்சி குன்றிவருகின்றது. எனவேதான், எமது நாட்டில், துரித மேடையேற்றத்தினால், நாடக நடிகர்களுக்கு போதிய பயிற்சி கிடைப்பதால் நாடக வளர்ச்சிக்கும்; அது வழிவகுக்கும்”. என்றார்.

# “மறுக்கப்பட்ட உரிமைகளை மாவட்ட சபை மூலம் பெறுவோம்”

## — கிருஷ்ணர்

(அரியாலை)

“சாதியின் பெயரால் வாக்குக் கேட்கிறோம் என்று கூறும் தலைவர்கள் சாதியை ஒழிக்க இதுவரை என்ன செய்தார்கள் நாமும் தமிழ் சாதியில் ஒரு பகுதியினர் என்பதை ஏற்றுக்கொள்ளாத இவர்கள் சாதி ஒழிந்துவிட்டதென்று கூறுவதில் அர்த்தமில்லை. சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்ட நாம் நமது உரிமைக்காகப் போராடுவது எவ்விதம் தவறாகும்”

இவ்வாறு, யாழ்ப்பாணம் இராசசிங்கம் வீதியில் (திட்டி) சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற கருத்தரங்கில் வேட்பாளர் திரு. இ. கிருஷ்ணர் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. கிருஷ்ணர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:-

“கல்வி பொருளாதாரம், வேலைவாய்ப்பு, குடிநிலம் என்பவற்றில் பின்தங்கியிருக்கும் சிறுபான்மைத்தமிழ்மக்களுக்கு அபிவிருத்தி சபை வரப்பிரசாதமாகும். இச்சபையின் மூலமே மறுக்கப்பட்ட உரிமைகளை நாம் வென்றெடுக்கமுடியும். இன்று நேற்றல்ல கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக நாம் பிறந்து, வளர்ந்து, வாழும் மண்ணிலே உரிமைப் போராட்டங்களை நடாத்தி வந்திருக்கிறோம். சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவிலேதான் எமது எதிர்காலத்தின்விடிவு தங்கியிருக்கிறது” என்று குறிப்பிட்டார்.

வேட்பாளர் சட்டத்தரணி பூ. சதாசிவரத்தினம் பேசுகையில் “மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சியினர் சாதிஒழிந்துவிட்டதென்று கூக்குரலிடுகின்றனரே தவிர எமது மக்களின் தொகைக்கேற்ப பிரதிநிதித்துவம் வழங்கவில்லை” என்றார்.

# ‘தமிழ்மக்கள் அபிவிருத்திக்கு தடைபோட்ட ஐ. தே. கட்சியை ஆதரிக்க முடியுமா?’

## குமாரசூரியர் கேள்வி

(யாழ்ப்பாணம்)

“அபிவிருத்தியெல்லாம் தமிழ் ஈழ விடுதலைக்கு பின்னர் என்று கடந்த பொதுத் தேர்தலில் கூறிய கூட்டணியினர் இன்று அபிவிருத்தி பற்றிப் பேசுகிறார்கள்.”

தொல்புரம் மேற்கில் நடந்த சோஷலிச முன்னணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சோஷலிச முன்னணித் தலைவருமான திரு. செ. குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் மார்க்கண்டு தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. குமாரசூரியர் மேலும் கூறியதாவது:-

“புதிய விகிதாசார தேர்தல் அமைப்பின்படி வாக்காளப் பெருமக்கள் கட்சிகளுக்கே வாக்களிக்கமுடியும். தனிப்பட்ட ஆட்களுக்கு அல்ல என்பதை நன்குணர்ந்து இத்தேர்தலைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

“தமிழ்மக்களின் அபிவிருத்திக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைபோட்ட, இராணுவ அதிரடிப் படைகளைக் குவிக்கின்ற, அப்பாவி இளைஞர்களைத் திடீர்திடீரெனக் கைது செய்யும் இந்த ஐ. தே. க. அரசாங்கத்திற்கு தமிழ் மகன் எவனாவது வாக்களிப்பானா?” என்று திரு. குமாரசூரியர் கேட்டார்.

திருவாளர்கள் சிவசுப்பிரமணியம், வி ஆறுமுகம், தருமலிங்கம், எஸ் சிவசம்பு ஆகியோரும் பேசினார்கள். (ஈ)

ஹரிசன்ஸ் அன்ட் குறெஸ்பீல்ட்
(கொழும்பு) லிமிட்டெட்

வெற்றிடம்: களஞ்சிய உதவியாளர்
கெமிக்கல் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.

திறமான கல்விப் பின்னணியும் ஆங்கிலத்தில் சீராகப் பணிபுரியக்கூடிய ஆங்கில அறிவுமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொது/தனியார் துறைகளில் பொறுப்பான பதவி வகித்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இருப்பு ஏடுகள் முதலியன நடைமுறைப்படுத்துவதிலும், களஞ்சிய வேலை மேற்பார்வை செய்வதிலும் அனுபவம், முக்கியம் அற்றதாயினும், விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகஸ்தர், வர்த்தப் பிரிவு,
ஹரிசன்ஸ் & குறெஸ்பீல்ட்
(கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 69, கொழும்பு. 9293

### மணிவாக்கு

மரத்தின் வேருக்கு நீர் பாய்ச்சு; அதனால் மரம் முழுவதும் நீர் பாய்ச்சப் பெறுவதாகிறது. இறைவனைப் பெறு; இறைவன் மூலம் அனைத்தையும் நீ பெற்றவனாகின்றாய்.

—அருள் விருந்து

# நமது நோக்கு

## கல்வியின் சீர்கேடு

கடந்த சனிக்கிழமை (23-5-81) எமது பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை வடமாகாணப் பாடசாலைகளின் அவலநிலையை விளக்குகின்றது.

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கு வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் திரு க. அருணாசலம் பாடசாலை அதிபர்களை எதிர்நோக்கும் அவசிய பிரச்னைகளைத் தெளிவுபடுத்திய பேச்சின் சாராம்சம் கட்டுரையாக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளின் கடந்தகால புகழ் நிலையைத் தலைவர் நினைவுபடுத்தியிருப்பது பொருத்தமாகும். காரணம் பாடசாலைகளின் இன்றைய வீழ்ச்சிக்குப் பொறுப்பு அரசாங்க நிர்வாகத்தினரே.

உதவி நன்கொடை பாடசாலைகளாகவிருந்த காலத்தில் இப்பகுதியில் நிலவிய சூழ்நிலை, பாடசாலைகளில் ஆசிரியர் சுதந்திரமாக தியாக உணர்வுடன் பாடசாலைகளுக்கு தம்மை அர்ப்பணிக்க உதவியது.

அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்தபோதும், நாட்டின் 'பாடசாலைகள் தழைத்தோங்க அரசாங்கத்தின் பொறுப்பு அவசிய' மென்பதையும் உணர்ந்தவர்களே யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள்.

இன்று நாடெங்கிலும் நாம் காணக்கூடிய பாடசாலைகள், தனியார் நிறுவனங்களால் கட்டப்பட்டு நிர்வகிக்கப் படக்கூடிய ஸ்தாபனங்கள் அல்ல என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆனால் நாம் ஒன்றை நினைக்க விதி இன்னொன்றாய் விட்டது. பாடசாலைகளை எடுத்த அரசாங்கம் சுமார் முப்பது இலட்சம் மாணவர்களையும் ஒன்றரை இலட்சம் ஆசிரியர்களையும், சிவத்த நாடா நிர்வாகமாகிய ஓநாய்க்கு இரையாக்கி விட்டது.

ஒன்றரை இலட்சம் ஆசிரியர்களை அடக்கி நடத்தும் அதிகாரத்தை விரும்பும் எவரும் ஒரு குட்டிச்சர்வாதிகாரியாக இறுமாப்படைவது இயற்கை.

இப்படிக்குறிப்பிடும்போது நாம் ஏதோ ஒருகுறிப்பிட்ட அமைச்சரையோ, அதிகாரியையோ அரசியல் வாதியையோ சுட்டவில்லை.

அரசியல் தலையீடு பாடசாலைகளின் கல்வியை மாணவ ஆசிரிய தொடர்பை, குறிப்பாக பாடசாலை நிர்வாகத்தை எவ்வளவு தூரம் பாதித்து விட்டதென்பதை நாட்டி எந்தவொரு பாடசாலையிலும் எந்த நேரம் பரிசோதனை செய்தாலும் விளங்கும்.

பாடசாலையின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட ஆசிரியர்கள் தகுந்த முறையில் கற்பிக்க மாணவர்கள் பயன் தரும் கல்வியைப் பெற அத்தியாவசியமான சூழ்நிலை குழம்பி விட்டது.

ஆசிரியர்களின் நலம் சேவையில் திருப்தி, சுதந்திரசேவை குறையத் தொடங்கிய காலம் பாடசாலைகளின் வீழ்ச்சி தொடங்கிய காலமெனலாம்.

நாடனைத்தையும் பாதிக்கும் இந்த நிலைமையை மேலும் மோசமடையவிடாமல் தலைமை ஆசிரியர் சங்கங்கள், ஆசிரியசங்கங்கள் குறைகளை நீக்கும் வழியில் அமைச்சருக்கும் அவருடைய அதிகாரிகளுக்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை உதவி நிலைமையைச் சீர்ப்படுத்த ஆவன செய்வாராக!

சுதந்திரமென்பது வேறொருவர் எமக்குத்தரும் நன்கொடையல்ல. எமது பிறப்புரிமை அதனைப்போராடிப் பெற்றுப் பேணுவது எமது கடமைகளில் முதாலாவதாகும்.

# 'அபிவிருத்தி சபைகளை அரசு ஏன் அறிமுகப்படுத்தியது?"

## நவம் தரும் விளக்கம்

(சாவகச்சேரி)

"'தமிழர் விடுதலைக் கூட்டணி: கடந்த 25 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களுக்கு காட்டிய எதிர்ப்பின் காரணமாகவும், இந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்குத் திட்டமிட்டுச் செய்துவரும் அநீதிகளை சர்வதேச அரங்குகளில் நாம் வெளிநாட்டவருக்கு எடுத்துக் காண்பித்துக் கொண்டிருப்பதினாலும், இந்திய பிரதமராகவிருந்த திரு. மொரார்ஜி தேசாய், அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த திரு ஜிம்மி கார்ட்டர் போன்றவர்களின் வற்புறுத்தல்களின் காரணமாகவும் ஓரளவு தமிழர் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய மாவட்ட அபிவிருத்திச்சபையை ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கொண்டு வந்தது."

இவ்வாறு மீசாலை பழைய புகையிரத நிலையத்திற்குச் சமீபமாக நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் சாவகச்சேரி எம், பி. திரு. வ. ந, நவரத்தினம் உரையாற்றுகையில் கூறினார். இக்கூட்டத்திற்கு இளைப்பாறிய ஆசிரியர் இ சதாசிவம் தலைமை வகித்தார்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

'மொரார்ஜி தேசாய் இலங்கைக்கு விஜயம்செய்தபொழுது எங்கள் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தை அவர் அழைத்து தமிழ் மக்களின் பிரச்னைகள் இந்த அரசாங்கத்தினால் தீர்த்துவைக்க முடியாவிட்டால், நாம் தலையிட்டுத்தீர்த்து வைக்கலாமா என்று கேட்டார். இந்த விபரத்தை பத்திரிகை வாயிலாக நீங்களும் அறிந்திருப்பீர்கள். இவ்விதமாக நாம் உள்ளும் புறமும் எமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

"1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் ஈழம் அமைப்பதற்கு வாக்களித்தார்கள் என்பதை நானோ அல்லது எனது கட்சியோ மறுக்கவும் இல்லை மறுத்துரைக்கப் போவதுமில்லை. ஒரு நாடு அல்லது ஒரு தேசம் விடுதலையடைவதாயிருந்தால் தியாகம் செய்ய வேண்டும். பாலஸ்தீனம், பங்களாதேஷ் போன்ற நாடுகள் விடுதலையடையத் துடித்த வரலாற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தேர்தல் முடிந்த அடுத்த நாள் தமிழ் ஈழத்தைக் கொண்டுவர முடியாது.

"உலக அரங்கில் மிகக் குறுகிய காலத்தில் தமிழர் பிரச்னையைத் தீர்க்கமுற்பட்டு முன்னணியில் நாம் நிற்கின்றோம் தமிழ் மக்களின் பிரச்னைகளை மாவட்ட அபிவிருத்தி சபை மூலம் படிப்படியாகத் தீர்க்கலாம் என்று கருதியதாலேயே நாம் இதனை ஆதரித்தோம்."

# வடபகுதிச் சிறைகள்: நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்குமா?

வடபகுதியிலுள்ள சிறைகள்பற்றி போதிய அக்கறை எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இப்பொழுது, வடமாகாணத்திலுள்ள நீதிமன்றங்கள் முன் நிறுத்தப்பட்டு சிறைத் தண்டனை பெறுபவர்கள் யாழ். கோட்டைக்குள் அமைந்திருக்கும் 'பண்டைய' சிறைச்சாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

இதைத்தவிர மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் விளக்கமறியல்கள் நிறுவப்பட்டுள்ளன. கிளிநொச்சியிலுள்ள விளக்கமறியல் ஏறக்குறைய 5 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்டது. ஏனைய பல ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்டன.

மேற்படி விளக்க மறியல்களில், சந்தேக நபர்களும் கைதிகளும் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்படும்வரை தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படுகின்றனர்.

யாழ். சிறைச்சாலையிலுள்ள சந்தேக நபர்கள் வழக்குகள் சம்பந்தமாக இவ்விளக்க மறியல்களுக்கு பஸ்ஸிலும் புகைவண்டியிலும் கொண்டு செல்லப்படும்போது கைவிலங்கிடப்பட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்ட அவல நிலையிலேயே காணப்படுகின்றனர் பெரும்பாலும் இரு வாரங்களுக்கு ஒரு தடவை இக்கதி அவர்களுக்கு நேர்கின்றது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற தூர இடங்களைச் சேர்ந்தவர்கள் யாழ். சிறைச்சாலையில் சந்தேக நபர்களாகத் தடுத்துவைக்கப்படும்போது உறவினர்களோ வழக்கறிஞர்களோ அவர்களை அடிக்கடி சந்திக்கமுடியாதுபோய் விடுகிறது. இது அவர்களுக்கு இருந்துவரும் நீண்டகால மனக்குறை. இதுகுறித்து பொறுப்புவாய்ந்தவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளபோதிலும் அதிகாரிகளின் செவியில் ஏறியதாகத் தெரியவில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறைச்சாலையையும் விளக்க மறியல்களையும் தவிர, திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் ராஜவீதியில் திறந்தவெளி சிறைப்பண்ணை ஒன்றும் இருக்கின்றது. இங்கு 125 கைதிகள் தங்குவதற்கு வசதியுள்ளபோதிலும், இப்பொழுது ஏறக்குறைய 50 கைதிகளே உள்ளனர். இதனால் நீர்ப்பாசன வசதிகள், மின்சார வசதிகள் போன்றவை உள்ளபோதிலும், பண்ணை விளைச்சல் வலுவாகக் குறைந்துவிட்டது. உச்ச பயனை இது இன்று அளிக்கவில்லை.

இந்த நிலைமைகளை நோக்குப்போது, சீர்திருத்தங்களின் அவசியம் புலப்படும். இது குறித்து நான் அண்மையில் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தேன். அதில் தெரிவித்த ஆலோசனைகளைப் பொது மக்களுக்கு வெளிப்படுத்துவது பயனுள்ளதாய் இருக்கும் என்ற எண்ணத்தில் அவற்றை இங்கு தருகின்றேன்

முதலாவதாக, கிளிநொச்சி விளக்க மறியல் சிறைச்சாலையாக மாற்றப்படவேண்டும்; இதற்கு அதிக செலவு ஏற்படாது. கட்டட வேலைகளில் திறமையுள்ள கைதிகளை இதற்குப் பயன்படுத்தலாம்; இவ்வாறுதான் கிளிநொச்சி விளக்க மறியல் கட்டப்பட்டது கைதிகளே காடு வெட்டி, கிணறு தோண்டி, கட்டடத்தை அமைத்தனர்.

இவ்வாறு கிளிநொச்சிச் சிறை தரமுயர்த்தப்பட்டால் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த கைதிகள் அங்கு தடுத்துவைக்கப்படலாம். இதனால் அவர்களை நீதிமன்றங்களுக்குக் கூட்டிச் செல்லும் தூரம் குறைவதோடு, உறவினர்களும் வழக்கறிஞர்களும் அவர்களை அடிக்கடி அதிக செலவின்றிச் சந்திக்கலாம்

அடுத்ததாக, ராஜ வீதியிலுள்ள திறந்தவெளி சிறைப் பண்ணையை மூடிவிட்டு, கிளிநொச்சிச் சிறைக்கு அண்மையில் புதிய பண்ணை ஒன்றைத் தொடங்கலாம். இங்கு வளமான நிலம் இருப்பதால் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றை மேலும் விரிவுபடுத்தலாம். இதற்கான பூர்வாங்க வேலைகளைக் கைதிகளே செய்யலாம்.

நான் மேலே வகுத்துள்ள திட்டத்தைச் செயற்படுத்த மேலதிக பணியாளர்கள் தேவையில்லை கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ். சிறைச்சாலை உதவி அதிபர் பதவி காலியாகவுள்ளது. இந்தப் பதவி நிரப்பப்பட்டால், இந்த உதவி அதிபர் கிளிநொச்சிச் சிறைச்சாலைக்கும் பண்ணைக்கும் பொறுப்பாகவிருக்கலாம் ராஜ வீதிப் பண்ணையில் இப்பொழுது கடமையாற்றும் பணியாளர்களும் சிற்றூழியர்களும் கிளிநொச்சிக்கு மாற்றப்படலாம். ஆதலால் கிளிநொச்சிச் சிறைக்கு மேலதிக பணியாளர்கள் தேவைப்படுப் என அஞ்சவேண்டியதில்லை.

இத்திட்டத்தினால் போக்குவரத்து செலவுகளும் குறையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ராஜவீதி சிறைப்பண்ணை அமைந்துள்ள 20 ஏக்கர் காணியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு உதவும் கற்பித்தல் மருத்துவமனை அமைக்கப்படலாம். எல்லா வகையிலும் இவ்விடம் அதற்குப் பொருத்தமானது.

எனது ஆலோசனைகளை யாழ் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணரும், சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். கனகநாயகமும் ஆதரித்துள்ளனர் என்பதையும், எனது திட்டத்தை யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைச்சுவாமி வரவேற்றார் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நீதி அமைச்சு இதைச் செயற்படுத்துமா?

**— கே. தங்கராஜா —**
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிபர்)

### அன்று நடந்தது இன்று நடப்பது

## இந்திராவும் கமலாவும் சகோதரிகள் போல

பண்டிட் ஜவஹர்லால் நேரு கமலாவைக் கைப்பிடித்து ஏறக்குறைய இரு தசாப்தத்தின்பின் - அதுவும் கமலா இந்திராவுக்குத் தாயாகிப் பல ஆண்டுகளின்பின் - தன் துணைவியைப்பற்றி நேரு தெரிவித்த பின்வரும் உரை சுவைமிக்கதாகும்.

"விவாகம் நடந்து 18 ஆண்டுகள் ஆனதின் பின்னரும் கமலா ஒரு கன்னிப் பெண் மாதிரி இருந்தாள். அவள் முகத்தில் வயதானதின் சின்னம் தெரியவில்லை. அன்று என்னை மணந்துகொண்டு என் இல்லத்தில் நுழைந்தபோது இருந்தமாதிரியே 18 ஆண்டுகள் கழித்தும் இருந்தாள்.

நானும் கமலாவும் உலாவுதன்பொருட்டு முன்பின் தெரியாத இடங்களுக்குச் சென்றால், கமலா என் குமாரியா என்று சிலர் கேட்பார்கள். அவளும் இந்திராவும் இரு சகோதரிகள்மாதிரியே இருந்தனர்."

**வி. கே. நவசோதி**

# மக்கள் கருத்து

## நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ். நகரில் கடைகளின் வாசல்களில் தனியார் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பொதுமக்களும் கடைக்காரர்களும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். கடைகளையே மறைத்து வாகனங்கள் நிற்கின்றன. இதனால் பாவனையாளர்கள் கடைகளைத் தெரிவு செய்வதிலும் கடைகளுக்குச் செல்வதற்கும் பெரிதும் கஷ்டமடைவதுடன் வியாபாரமும் தடைப்படுகிறது. வாகனங்களை நிறுத்துவதற்கு இதற்கென விசேஷ இடங்களை ஒதுக்குவதன் மூலமே இப்பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும் என்பது எனது அபிப்பிராயம்.

இதுவிடயத்தில் பொலிசாரும் பொது மக்களும் கலந்துரையாடி ஒரு முடிவுக்குவர வேண்டியதன் அத்தியாவசியத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வாகனம் வைத்திருப்பவர்கள் தங்கள் வாகனங்களை மற்றவர்களுடைய வியாபாரத்திற்குத் தடையாக விடுவதால் பாதிக்கப்படுபவர்களில் ஒருவன் என்ற காரணத்தால் இக்கருத்தை இங்கு எழுதலானேன்.

மேலும் இரவு நேரத்தில் மின்சாரம் இல்லாத 8 - 9 மணிக்கிடையில் ஒளி இல்லாத வாகனங்கள் பெருமளவில் நடமாடுகின்றன மக்கள் நடமாடமுடியாத அளவுக்குப் பெரும் அபாயகரமாக இது இருப்பது குறிப்பிடத்தக்கது. இது விஷயத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது வருந்தத்தக்கது. உயர் அதிகாரிகள் இது விஷயத்திலும் கவனமெடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

— கலைஞானி

ஸ்ராலின் வீதி,
யாழ்ப்பாணம்.

### த. வி. கூட்டணி பதில்கள் வெளிவரும்

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தலில் வடபகுதியில் போட்டியிடும் கட்சிகளிடமும் சுயேச்சைக் குழுக்களிடமும் நாம் கேட்டிருந்த நான்கு கேள்விகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அளித்துள்ள பதில் நாளைய "ஈழநாடு" ஏட்டில் வெளிவரும்.

துருக்கி விமானக் கடத்தல்

# 5 அமெரிக்கரை கொல்லும் காலக்கெடு ஒத்திவைப்பு!

## துருக்கி அரசின் பயமுறுத்தலுக்கு தீவிரவாதிகள் பணிந்தனர்

அங்காரா, 25

துருக்கிய விமானத்தைக் கடத்திய நான்கு இடதுசாரி தீவிரவாதிகள் தமது கோரிக்கைக்கு இணங்காவிடின் விமானத்திலிருக்கும் ஐந்து அமெரிக்க பிரயாணிகளை சுட்டுக் கொல்லப்போவதாக விடுத்துள்ள காலக்கெடுவை காலவரையின்றி ஒத்திவைத்துள்ளதாக பல்கேரிய செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

துருக்கி பயங்கரவாதிகள் என்ற பெயரில் தண்டனை வழங்கப்பட்ட 47 கைதிகளை விடுதலை செய்யுமாறும் 5 லட்சம் டலர் பிணைப்பணமாக வழங்குமாறும் கோரி விமானத்தைக் கடத்திய தீவிரவாதிகள் துருக்கி அரசு தமது கோரிக்கைக்கு இணங்காவிடின் விமானத்தில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் நியூயோர்க் சிற்றி வங்கியின் உயர் அதிகாரிகளான 5 அமெரிக்கர்களை மணிக்கு ஒருவராகக் கொலைசெய்யப்போவதாக முதலில் அறிவித்திருந்தார்கள்.

### துருக்கி அரசு எச்சரிக்கை

பயணிகளில் எவராவது கொலைசெய்யப்பட்டால் 47 கைதிகளும் தூக்கிலிடப்படுவார்கள் என்று துருக்கி அரசு எச்சரிக்கை செய்ததை அடுத்தே கடத்தல்காரர்கள் தமது காலக்கெடுவை ஒத்திவைத்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பணயம் வைக்கப்பட்டிருக்கும் 118 பேரில் பெண்களும் குழந்தைகளும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர் என்றும் இருவர் தப்பி ஓடிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

3 வது மண்டல நாடுகளில்

## சோவியத் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது அமெரிக்காவின் கடமை

### பாதுகாப்பு அமைச்சர் ஹெய்க் கூறுகிறர்

வாசிங்டன். மே. 25

3வது நாடுகளில் சோவியத் யூனியனின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது அமெரிக்காவின் கடமை.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் டாக்டர் அலெக்சாண்டர் ஹெய்க் தெரிவித்தார்.

அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் தமக்கு அளிக்கப்பட்ட கௌரவ டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் அங்கு உரையாற்றிய டாக்டர் ஹெய்க் மேலும் கூறியதாவது: உலகில் அமைதி நிலவவேண்டுமானால் 3 வது மண்டல நாடுகளில் சோவியத் யூனியனின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவது மிக அவசியம் மனிதாபிமான முறையில் அதனை மேற்கொள்ள வேண்டும்.

சோவியத் யூனியனின் அச்சுறுத்தலை அமெரிக்கா முறியடித்தால் மாத்திரமே உலகில் அமைதி ஏற்படும். (இ)

## 40 மாணவர்கள் வெளிநடப்பு

வாஷிங்டன், மே 25

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் டாக்டர் அலெக்சாண்டர் ஹெய்க்கு அமெரிக்க பல்கலைக் கழகம் ஒன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்த வைபவத்தில் பட்டமளிப்பின்போது 40 பட்டமளிப்பு மாணவர்கள் மண்டபத்தைவிட்டு வெளியேறினர் என்றும் டாக்டர் ஹெய்க் பட்டமளிப்பின் பின் உரையாற்றியபோது கூட்டத்தில் இருந்த இருபெண்களும் இருஆண்களும் எழுந்துநின்று கோஷங்களை எழுப்பினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

எல்சல்வடோர் அரசுக்கு அமெரிக்க ஆதரவளித்து வருவதையும் அமெரிக்க பாதுகாப்பு செலவுகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் கண்டித்தே இந்த நால்வரும் கோஷம் எழுப்பினர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## காடுவளர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி திட்டங்களினூலும் சட்டவிரோதமாகக் காட்டுமரங்களை வெட்டுவதாலும் அருகிவரும் காடுகளை மீண்டும் வளர்க்கும்முகமாக எதிர்வரும் ஆறு ஆண்டுகாலத்தில் வனபரிபாலன திணைக்களம் 1லட்சத்து 27ஆயிரத்து 210ஏக்கர் காணிகளில் காடு வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

காடுவளர்ப்பு நடவடிக்கைகளுக்காகக் காணி காணி அபிவிருத்தி அமைச்சுக்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, நொருட் நிறுவனம் சீடா நிறுவனம், ஐக்கிய அமெரிக்க நெதர்லாந்து அரசாங்கங்கள் ஆகியன நிதி உதவி வழங்கியுள்ளன.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, நுவரெலியா மாத்தளை புத்தளம், மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் காடு வளர்ப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ)

வை. பி. சவான் கூறுகிறர்

## காங்கிரசில் சேருமாறு இந்திரா அழைக்கவில்லை

### நாட்டின் நலன்கருதியே பிரதமருக்கு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்தேன்

புதுடில்லி, மே. 25

இந்திராகாங்கிரசில் சேருமாறு பிரதமர் திருமதி இந்திராகாந்தி எனக்கு அழைப்பு விடுக்கவில்லை நானாகவே இந்திராகாங்கிரஸ் கட்சியில் சேரும்முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

இவ்வாறு அர்ஸ் காங்கரஸ் தலைவர் திரு. வை, பி.சவான் தெரிவித்துள்ளார்.

தேசியநலன்கருதி பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்திக்கு ஒத்துழைப்பு வழங்கத்தாம் விரும்புவதாகவும் திரு சவான் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இன்றைய அரசியல் நிலையை நன்கு உணர்ந்த பின்னரே நாம் இந்திராகாங்கிரஸில் சேரத்தீர்மானித்தேன் அர்ஸ் காங்கிரஸ் அமைப்பாளர் திரு. தேவராஜ் அர்ஸ் நான் அவரது கட்சியிலிருந்து விலகுவதற்கு காரணம் காட்டுமாறு எனக்கு எழுதியுள்ள கடிதம் என்னிடம் வந்துசேரவில்லை கடிதம் கிடைப்பதும் அதற்குரிய பதில் அவருக்கு எழுதுவேன் அதுபற்றி எனது ஆதரவாளர்களுக்கும் விளக்குவேன். (இ)

சிரியாவிடம்

## அமெரிக்க தாங்கிகளை விழுங்கும் ரஷ்ய கருவிகள்

### இஸ்ரேல் பிரதமர் குற்றச்சாட்டு

ஜெருசலம், மே 25

லெபனனில் சிரியத் துருப்புகள் செல்லுமிடமெல்லாம் சோவியத் யூனியனின் இராணுவ ஆலோசகர்களும் செல்கிறார்கள்.

இவ்வாறு இஸ்ரேலிய பிரதமர் திரு. பெகின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தாங்கிகளை விழுங்கிவிடக்கூடிய சோவியத் யூனியனின் நவீன இயந்திர சாதனங்களை சிரியா வைத்துள்ளது என்றும் சிரியாவின் போர் நடவடிக்கைகளில் சோவியத் யூனியன் பின்னணியில் இயங்கிவருகிறது என்றும் திரு பெகின் கூறினார்.

இதேவேளையில் சிரிய-இஸ்ரேல் பிரச்சனையில் சவூதி அரேபியா சிரியாவுக்கே ஆதரவளிக்கும் என்று சவூதி அரேபிய மன்னர் காலித் தெரிவித்துள்ளார். (இ)

## துப்பாக்கி வீரர்கள் சரண்!

மட்றிட் மே.25,

ஸ்பெயின் மத்திய வங்கியைக் கைப்பற்றிய துப்பாக்கி வீரர்கள் வங்கிக் கட்டிடத்தை பொலிசார் தாக்கியதை அடுத்து பொலிசாரிடம் சரணடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் கடந்த பெப்ரவரி மாதம் தோல்வியுற்ற வலதுசாரிகளின் சதி முயற்சியில் ஈடுபட்டதனால் காவலில் வைக்கப்பட்டுள்ள நான்கு இராணுவ அதிகாரிகளையும் விடுதலை செய்யுமாறு கோரியே துப்பாக்கி வீரர்கள் மத்திய வங்கியைக் கைப்பற்றியிருந்தனர். (இ)

## கமலம் கொலை இன்று விசாரணை

(புலோலி).

பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலைவழக்கு விசாரணை இன்று மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ)

## ஈக்வடோர் அதிபர், அமைச்சர் மனைவிமாருடன் விமான விபத்தில் பலி!

வாஷிங்டன், மே 25,

ஈக்வடோர் ஜனாதிபதி திரு. ஜெயின் ரோல்ஸ்டோர் விமான விபத்தில் பலியானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரு நாட்டின் எல்லையில் விழுந்து நொருங்கிய விமானத்தில் பயணம் செய்த ஜனாதிபதி அவரது பாரியார் பாதுகாப்பு அமைச்சர் அவரது பாரியார், மற்றும் இரண்டு உதவியாளர்கள், விமானிகள் ஆகியோரும் இவ்விபத்தில் பலியானார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் வயதில் மிகக் குறைந்த ஜனாதிபதி இவரே என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

அரசாங்கத்தின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"அபிவிருத்திச்சபைகள் எங்கள் பிரச்சனைகளை தீர்க்காது. ஆனால் உடனடிப் பிரச்னையான குடியேற்றத்தை மாவட்ட சபைகள் மூலம் தடுக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது."

தலைவர் கலாநிதி சிற்றம்பலம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"தனிமதன் முக்கியமல்ல கட்சிதான் முக்கியம். பிராந்திய பாதுகாப்பை கருதியே மாவட்ட சபைத்தேர்தலை கூட்டணி ஆதரித்து நிற்கிறது. பாலஸ்தீனியர்கள் தங்களது பிரதேசத்தை இழந்து கூடாரங்களில் இருந்த நிலையில் போராடுகிறார்கள். போராட்டத்திற்கு பிராந்தியம்தேவை. மலையகத்து தொழிற்சங்கங்கள்கூட தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி என்பதை ஏற்கும் நிலையில் உள்ளன".

வேட்பாளர் திரு.ச பூபாலசிங்கம் பேசுகையில்கூறியதாவது;

"மாவட்ட அபிவிருத்தி சபைக்கும் பாராளுமன்றத்திற்கும் வித்தியாசம் உண்டு. பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தாலும் கூட மாவட்டசபைகளை ஜனாதிபதியால் தாம் நினைத்த நேரம் கலைக்க முடியாது. ஊழல் போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டால் நீதிபதி விசாரணை நடத்தி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்திலேயே அச்சபையைக் கலைக்கமுடியும் மாவட்ட சபைக்கு சரிவ அதிகாரமும் உண்டு. மீன்பிடித் தொழில் என்ற போர்வையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம் பெறும் சிங்களக் குடியேற்றத்தை மாவட்ட சபைகள் மூலம் தடுக்கலாம்"

சட்டத்தரணி திரு. விக்கினராஜா திருவாளர்கள் ஆ சதாசிவம், இ. கந்தமுத்து ஆகியோரும் உரையாற்றினார்கள். (செ-இ)

மாவட்ட சபைத்தேர்தலில்

## இறந்தவரின் வாக்கு அட்டை சேகரிக்கப்படுகிறதாம்

### ஆணையாளருக்கு குமார் கடிதம்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திச்சபை தேர்தலில் ஆள்மாறாட்டம் நடைபெறலாம் என்பதால் வாக்காளர்கள் அடையாள அட்டைகளைப் பாவித்து வாக்களிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக திரு. குமார் பொன்னம்பலம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

ஆள்மாறாட்டம் பற்றி முன்பும் தங்களுக்கு தெரிவித்து அறிக்கையொன்று விடுமாறு கேட்டிருந்தேன்.

வாக்காளர் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லுகையில் அடையாள அட்டையை, அல்லது தங்கள் நிரூபிக்க வேறு ஆதாரங்களை கொண்டுசெல்ல ஏற்பாடுகள் செயுமாறு கேட்கிறேன்.

வடக்கைப் பொறுத்தவரை தேர்தலைப் பகிஷ்கரிப்பது எனக் கணிசமான பகுதியினர் முடிவு செய்துள்ளனர். இந்த நேரம் பகிஷ்கரிப்போரின் வாக்குகளை ஆள்மாறாட்டம் செய்து வேறு சிலர் பாவிக்கவுள்ளதாகத் தெரிகிறது. இறந்தவர்கள், வெளிநாடு சென்றவர்களின் வாக்களிப்பு அட்டைகள் சேர்க்கப்பட்டு வருகின்றன.

ஒரு நேர்மையான தேர்தல் நடக்க, வாக்காளர்கள் ஆதாரங்களுடன் செல்வது நல்லது. ஆள்மாறாட்டத்தைத் தடுக்கும் நடவடிக்கையாக இது அமையும். இது விடயமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்கிறேன். (எ)

## டிரக்டர்' கட்டணம்குறைப்பு

(புலோலி)

வடமராட்சி விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கு முகமாக அம்பன், புலோலி கமநலச்சேவை மத்திய நிலையங்கள் உழவு இயந்திர சேவைக்கட்டணத்தைக் குறைத்து உள்ளன.

அம்பன், புலோலி கமநலச்சேவை மத்திய நிலையங்களுக்கு கமநலச்சேவைத் திணைக்களம் நான்குசில்லு உழவு இயந்திரங்களை அனுப்பிவைத்திருந்தது. இவ் உளவு இயந்திரங்களை வாடகைக்குப் பிடிக்கும் விவசாயிகள்' பொதுமக்களிடமிருந்து இதுவரை மீற்றரெுன்றுக்கு மணித்தியாலத்திற்கு 70 ரூபா அறவிடப்பட்டு வந்தது இக்கட்டணம் தனியார் உழவு இயந்திர வாடகையை விடக்கூடுதலாக உள்ளதென பொதுமக்கள் அதிருப்திதெரிவித்தமையினாலேயே மீற்றரொன்றுக்கு மணித்தியாலத்திற்கு 20 ரூபா குறைக்கப்பட்டு இனிமேல் மீற்றரொன்றுக்கு மணித்தியாலத்திற்கு 50 ரூபா அறவிடுவதற்கு யாழ் மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் அங்கீகாரம் வழங்கியுள்ளார். (இ)

# "தீண்டாமை ஒழிப்புக்கு தேர்தல்கள் பரிகாரமாக அமைந்ததில்லை"

## வெகுஜன இயக்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"காலத்திற்குக் காலம் தேர்தல்கள் வந்துபோகின்றன. அவை தீண்டாமை ஒழிப்புக்கு சரியான பரிகாரமாக அமைந்ததில்லை. இனி அமையப்போவதுமில்லை அவை பின்தங்கிய மக்களின் பிளவுக்கே வழிவகுக்கும்."

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இயக்கத்தின் சார்பில் தலைவர் திரு. க. கிருஷ்ணபிள்ளை வெளியிட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"பொதுசன வாக்களிப்பு வந்ததிலிருந்து இதுவரை ஒடுக்கப்பட்ட மக்கள், பலதடவை பலவிதங்களில் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல், தங்களுக்கென பல பிரதிநிதிகளையும் கண்டுள்ளனர். ஆயினும் அவற்றின்மூலம் தீண்டாமைப் பிரச்னைகளைத் தீர்க்கும் ஒரு வழிகளேனும் பிறந்ததில்லை.

"செனற் சபையில் திருவாளர்கள் ஏ. பி. இராசேந்திரா, ஜீ. நல்லையா ஆகியோரும், அதற்கடுத்ததாக இருக்கும் பாராளுமன்றத்தில் திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம், ரீ. ராசலிங்கம் ஆகியோரும் இடம்பெற்றனர். பல ஸ்தாபனங்களிலும் கிராமிய மட்டத்திலும் இவர்களைப் போன்ற பலர் இடம்பெற்றிருந்தனர். இவற்றின் மூலம் தீண்டாமைப் பிரச்னை தீர்ந்துபோய்விடவில்லை.

"1966-ம் ஆண்டில் சாதியமைப்பை எதிர்த்த சகல மக்களையும் உள்ளடக்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதும், அது சகல தேர்தல்களையும் நிராகரித்து கிளர்ச்சிகள் அடிப்படையில் இயக்கம் நடத்தியதையும் அதன்மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகளையும் நாடு நன்கறியும். குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் இவ்வுண்மையை உய்த்து உணர்ந்து கொண்டனர்.

"தேர்தல் முறையினால் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படப் போவதில்லை என்பதனை உணர்ந்துள்ள தென்னிலங்கை மக்களின் கணிசமான தொகையினர் தேர்தலை நிராகரித்துள்ள இவ்வேளையில் இத்தேர்தல்களால் தங்களின் இனப்பிரச்னை தீர்ந்துவிடும் என்று தமிழ் மக்களும் தங்கள் தீண்டாமைப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று ஒடுக்கப்பட்ட மக்களும் நம்பிக்கை கொண்டு தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது விவேகமான நடவடிக்கை ஆகாது. வாக்கெடுப்பு முறைக்குப் பதிலாக தங்கள் உரிமைப் போராட்டங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்டுவந்த ஐக்கியத்தினால் ஒடுக்கப்பட்டமக்கள் பலவழிகளில் முன்னேறிச் சென்று வெற்றிகள் பெற்றனர். 1966 முதல் இன்றுவரை மக்கள் பெற்றுள்ள இந்த நம்பிக்கை இத்தேர்தல் நடவடிக்கைகளினால் சிதைந்துவிடுவதற்கான அபாயம் வந்துவிடும் என்பதை வெகுஜன இயக்கம் சுட்டிக்காட்ட விரும்புகிறது."

"நடந்து முடிந்துவிட்ட வாக்கெடுப்புகள் யாவும் பிற்போக்காளர்களை அதிகாரத்திற்குக் கொண்டுவரும் வேள்விக்களமாகவே அமைந்து வந்துள்ளன. அதன்முடிவில் அதன் பாதிப்புக்கள்யாவும் மக்கள் தலையிலேயே சுமத்தப்பட்டிருக்கின்றன என்ற பாடத்தைத்தான் அவை போதித்துள்ளன. எனவே தான் மக்களை நிரந்தரமாகப் பிளவுபடுத்தும் சகல வாக்கெடுப்புகளையும் நிராகரித்தல் உரிமைகளுக்கான போராட்ட அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களையும் அவர்களின் விடுதலையை விரும்பும் சகல மக்களையும் ஒன்றிணைத்தல்" என்ற எமது 1966ம் ஆண்டுப் பிரகடனத்தை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மீண்டும் இப்போது உறுதிப்படுத்திக் கொள்ளுகின்றது"

# "அரசாங்கத்தின் திட்டங்களை எதிர்க்கட்சியினரும் பாராட்டுகின்றார்கள்"

## மட்டக்களப்பில் பிரதமர்

(மட்டக்களப்பு)

"அரசாங்கத்தின் திட்டங்களை எதிர்க்கட்சியினர் கூடப் பாராட்டுகின்றார்கள். இந்த நாட்டில் வாழுகின்ற அனைவரும் இலங்கை மாதாவின் மக்கள் என்ற ரீதியில் தானெமது அரசாங்கம் செயல்பட்டுவருகின்றது".

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது மாதிரிக்கிராமமான கற்குடாத் தொகுதியில் உள்ள மாஞ்சோலைக் கிராமத்தைத்திறந்து வைத்து பிரதமர் ஆர். பிரேமதாசா பேசுகையில் தெரிவித்தார்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது இவ்வைபவத்தில் கலந்து கொள்வது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அரசாங்கம் நிதிநெருக்கடியான சூழ்நிலையில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் கடந்த அரசாங்கம்போல் ஏழைமக்களின்வயிற்றில் அடிக்கவில்லை எமது அரசாங்கத்தின் அபிவிருத்திப் பாதையை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். சிலர் கண் இருந்தும் குருடர்களாக அரசாங்கத்தை திட்டுகின்றார்கள்.

"கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்ற இன்னல்கள் அளவிடமுடியாதவை தமிழ் மக்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டது. பௌத்தர்கள் இந்தியாவிற்கும் தமிழர் தமிழ் நாட்டிற்கும். இஸ்லாமியர்கள் மக்காவிற்கும், கிறிஸ்தவர்கள் ரோமிற்கும் செல்லமுடியாத தடைகள்

(7ம் பக்கம் பார்க்க)

### "வெளிநாட்டுத் தமிழர்களின் 82-ம் ஆண்டு

# 'தமிழீழப் பிரகடனத்தை கூட்டணி எதிர்ப்பதேன்?"

## காவலூரில் குமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ்ஈழம்தான் கூட்டணியின் இலட்சியமென்றால், வெளிநாட்டு தமிழர்கள் 82ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று தமிழ்ஈழப் பிரகடனம் செய்வதை கூட்டணியினர் எதிர்ப்பதேன்?"

ஊர்காவற்றுறையில் தமிழ் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். சபேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: "தமிழ் ஈழம் பெறுவதற்காக தமிழ் மக்கள் கடந்த பொதுத்தேர்தலில் அளித்த ஆணையைப் பெற்று கூட்டணியினர் பாராளுமன்றம் சென்றனர். கடந்த 4 வருடங்களாக அதனைப் பெறுவதற்காக எவ்வித போராட்டமோ நடவடிக்கைகளோ எடுக்கவில்லை. வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் 82ம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய்யப்போவதாகவும். அதற்குத் தயாராக விருங்கள் என்றும் கூறியதும், கூட்டணியினர், பின்வாங்குகிறார்கள். தமிழ் ஈழப் பிரகடனத்தை கூட்டணியினர் எதிர்ப்பதேன்? தங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுகிறார்கள். இப்படி அஞ்சினால் தமிழ் ஈழம் பெறமுடியுமா?"

"திரு. வைகுந்தவாசன் 82 தைப்பொங்கல் தினத்தன்று தமிழ் ஈழப் பிரகடனம் செய்யப்போவதாக அறிவித்ததும் அதனை கூட்டணித் தலைவர்கள் எதிர்கிறார்கள். இதே வைகுந்தவாசன் ஐ. நா. சபையில், தமிழ் ஈழம்பற்றி பேசியதும், இங்கிருந்து திரு. அமிர்தலிங்கம் ஓடிச்சென்று லண்டனில் ஈழத்தமிழர் இணைப்புக்குழு ஒன்றுக்கு திரு. வைகுந்தவாசனை தலைவராக்கினார். ஆனால் இன்று வெளிநாட்டு தமிழர்களின் தமிழ் ஈழப்பிரகடனத்தை எதிர்க்கின்றார்."

டாக்டர் ஏ. எல் ஏபிரகாம், திரு. என். ரீ சுப்பிரமணியம், திரு. ஜிம்மிராசரத்தினம், திரு. குலேந்திரன் ஆகியோரும் பேசினார்கள். (க)

# தேர்தல் களம்

# 'அரசாங்கத்தின் பிரசாரத்தை முறியடித்து வருகின்றோம்'

(யாழ்ப்பாணம்)

"வவனியா மாவட்டத்தை மதவாச்சி மாவட்டத்துடன் இணைத்து சிங்கள மாவட்டமாக்க அரசாங்கம் முனைந்தபோது தமிழர் விடுதலைக்கூட்டணியின் எதிர்ப்பினால் அரசாங்கம் அந்த முயற்சியைக் கைவிட்டது"

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ரி. திருநாவுக்கரசு அராலி தெற்கு கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. ச. பூபாலசிங்கத்தை ஆதரித்து வரிவுரையாளர் கலாநிதி கே. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"அமைச்சர்கள் திரு. எஸ். இராசதுரை, திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் வவனியா-மதவாச்சி இணைப்பை விரும்பியோ அன்றி விரும்பாதிருந்தாலும் கூட தாம் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சிக்காக அந்த இணைப்பை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது. இந்த நிலையிலேயே ஐ. தே. க. பிரதம வேட்பாளர் திரு. ஆ. தியாகராசாவும் இருக்கிறார். அவரால் சுதந்திரமாக இயங்க முடியாது கட்சிக்கு கட்டுப்பட்டே இயங்க வேண்டும்.

ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு விட்டது என்று உலக நாடுகளில் கூறிவருகிறபோது எதிர்க்கட்சி ஆகிய நாங்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களை சாதுரியமாக பயன்படுத்தி அரசாங்கத்தின் பிரசாரத்தை முறியடித்து வருகின்றோம்,"

(5-ம் பக்கம் பார்க்க)


நெல் விளைச்சல் பெருக
நிலையான துணை
ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 டீபீஏ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன் புல், சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.




ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F-34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

CIC கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

TAL 5920

450 மி. லீட்டர் ரூபா 49-50 3.25 லீட்டர் ரூபா 325/-

**Haran** (Jaffna)
Daily 10 30, 2-15, 4-45 7-00, 9-30
Jim Brown-Christopher George
I ESCAPED FROM DEVIL'S ISLAND
(Strictly for Adults -color

நாகம்ஸ் (சுன்னாகம்)
4 45, 7-00, 9-30
**Fear in The Night**
(Color)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா நடித்த
**பணக்காரப் பெண்**

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த் - லதா
**ஆயிரம் ஜென்மங்கள்**

லிடோ யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
**அழியாத கோலங்கள்**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30. தினசரி: 2-30, 6-15, 9-30
● பாக்யராஜ் ● ரதி ● சரிதா
**புதிய வார்ப்புகள்**
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
6-வது ஹவுஸ்புல் வெற்றி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30.
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
**ரிஷி மூலம்**
அண்மையில் நடைபெற்ற—ஸ்ரீலங்காவிற்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான கிறிக்கற் ஆட்டத்தைப் பிரத்தியேகமாக வின்ஸர் திரையில் கண்டுகளிக்கத் தவறாதீர்கள்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
**பட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
100-வது நாளை தேடி பரவுகிறது
✱ ரஜனி காந்த் ✱ ஷோபா
✱ ஸ்ரீபிரியா ✱ சுமன்
✱ சௌகார் ஜானகி நடித்த
**தீ**
இலங்கை-இந்திய தயாரிப்பு

சாந்தி (யாழ்.நகர்)
ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!!
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-45
நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
அளிக்கும் வெள்ளிவிழா வெற்றிச்சித்திரம்
சிவாஜி விஜயா-மேஜர்-பாலாஜி-தேங்காய்
புஸ்பலதா-கீதா-மனோரமா-ஜெயமாலினி
**தர்மராஜா**
எழில்மிகு யப்பானில் படமாக்கப்பட்டது!
'காராட்டி' சண்டைக்காட்சிகள் நிறைந்த
வண்ண ஓவியம்!

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 13-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(26 - 5 - 81)

மேடம்; பொருள் விரயத்துக்கு இடமுண்டு. கடமையாற்றுமிடத்தில் கண்துடைப்பு வேலைகள் நடைபெறும் நண்பர் ஒருவர் உங்களை ஏமாற்றக்கூடும் இக்கணைத் தவிர்க்கவும்.

இடபம்: பணத்தை எடுத்து வீசினாலும் பலன் மட்டாகத்தான் இருக்கும். சகதொழில்களுடன் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளவும். புனைந்துரைகளால் மனம் புண்படலாம் பொறுமையே வேண்டும்.

மிதுனம்; கழுகுப்பார்வை உங்களைவட்டமிடும். எடுத்த காரியத்தில் தடைகள் ஏற்படலாம் எதிலும் ஏமாற்றம் தென்படும். அரசபயத்துக்கு இடமுண்டு. எதிலும் அடக்கத்துடன் இருக்கவும்.

கடகம்; இதயப்படுதாவில் இன்பக்கூத்து வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும் கற்றதனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

சிங்கம்! ஆணவப் போக்கினால் அடிசறுக்க நேரிடும் குடும்பத்தில் சிறிய பூசலுக்கும் இடம் ஏற்படலாம் வயது முதிர்ந்த ஒருபெண் மூலம் அவப்பெயருக்கும் இட்முண்டு சுகாதாரத்தைப் பேணுவதுடன் அடக்கமாக இருக்கவும்.

கன்னி: தன்மான வாழ்வுடன் தனமும் சேரும் தாயின் ஆதரவும் தவறாது கிடைக்கும் முயற்சிசெய் முன்னேற்றமுண்டு.

துலாம்! கனிவானபேச்சு தந்தம்போல் பார்வை கன்னியர் உறவு காதலுக்கு இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

விருட்சிகம்: எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பர். ஏக்கத்தின் சாயல் உண்டு. ஆத்திரத்தை அடக்கினால் அமைதிக்கு இடமுண்டு.

தனு: இதயத்தில் இனிமை துள்ளும். பகைவர்கள் பணிவர் பரந்தநோக்குடன் செயற்படுவதன் மூலம் பொதுமக்களின் பாராட்டும் கிடைக்கும்.

மகரம்! செய்தொழிலில் இரகசியங்கள் தோன்றக்கூடும் உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம் நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரி விடுவதற்கு முனையக்கூடும் அவதானம் வேண்டும்.

கும்பம்! புதிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இன்று நலம் வெளியிடத்துத் தொடர்புகளிலும் நல்ல மாறுதல்கள் தென்படுகின்றது. மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும்.

மீனம்! இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணைதாக்கும் உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள் உவகை சேரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## ஜனாதிபதி மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்வரும் 30ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்கிறார்.

மட்டக்களப்பு, கற்குடா, பட்டிருப்புத்தொகுதிகளில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் அபிவிருத்தி சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி உரை நிகழ்த்துவார், (து)

## உத்தியோக

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியானால் மாவட்ட சபைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது''

சட்டத்தரணி திரு. ஜிம்மி ராசரத்தினம், திரு. ஈ. ஆர். ஆனந்தராசா. திரு. அ. மாணிக்கசோதி ஆகியோரும் பேசினார்கள். (க)

வெஸ்லி, (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
**கல்யாண ராமன்**

## கைலாய வாகன வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் கைலாய வாகன வெள்ளோட்டவிழாவும் திருவிழாவும் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறுகின்றன.

கலாகேசரி ஸ்ரீ ஆ. தம்பித்துரையினதும் கலாகேசரி கலாலய கலைஞர்களின் கைவண்ணத்திலும் உருவான இப்பிரமாண்டமான கைலாய வாகனம் சிற்பசாஸ்திர விதிகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெள்ளோட்ட விழா இரவு 7மணியளவிலும் விநாயகப் பெருமான் கைலாய வாகனத்தில் வீதியுலாவரும்காட்சி இரவு 10 30 மணியளவிலும் நிறைவேறும்.

இவ்விழாவிலே இணுவையூர் கோவிந்தசாமிப்பிள்ளையின் நாதஸ்வரக்கச்சேரியும் ஸ்ரீராசிவ அன்புவின் சங்கீதகதா பிரசங்கமும் இடம்பெறும்.

## புதிய பஸ் சேவைகள்

(புளியங்குளம்)

முல்லைத்தீவு-அம்பலவன் பொக்கணை, முல்லைத்தீவு-கெப்பாபுலவு ஆகிய இரண்டு புதிய பஸ்சேவைகளை போக்குவரத்து, போக்குவரத்துசபை முஸ்லிம் கலாசாரதிணைக்கள அமைச்சர் ஜனாப் எம். ஏச் முகமத் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார் அச்சமயம் போக்குவரத்து அமைச்சர் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர் மன்சூர், வடபிராந்திய இ. போ. ச. தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் ஆகியோர் பஸ் வண்டி மூலமாக இரு கிராமங்களுக்கும் சென்றனர்,

## அரசாங்கத்தின்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட இருந்தன, ஆனால் இன்று தமிழ் மொழிக்கு அரசியல் அமைப்புச்சட்டத்தில் உரிய அந்தஸ்து வழங்கியுள்ளோம் எந்த மதத்தவர் என்றாலும் சரி; எந்த மொழி பேசுபவர் என்றாலும் சரி; எந்த நாட்டிற்கும் செல்ல உரிமை வழங்கியுள்ளோம்.

"மாவட்ட அபிவிருத்தி சபைகள் அதிகாரம் மக்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. மக்கள் அபிவிருத்தியில் நேரடியாகப் பங்கு பற்றுகின்றார்கள். இதற்காகவேநாடெங்கிலும் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் உருவாக்கப்படுகிறது. இதற்கான உறுப்பினர்களை தேர்தல் இல்லாமற் கூட தெரிவுசெய்ய எமக்கு அதிகாரம் உண்டு. ஆனால் பொதுமக்கள் நான்கு ஆண்டு கால அபிவிருத்தியைப் பற்றி என்ன தெரிவிக்கிறார்கள் என்பதை அறியவே தேர்தல் நடைபெறுகிறது

"மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தத் தடவை விஜயத்தின்போது இரண்டு மாதிரிக் கிராமமும் அடுத்த தடவை விஜயத்தின்போது இன்னும் இரண்டும் திறந்து வைக்கப்படும்'' என்று கூறினார்.

## ஜப்பான் பயிற்சி முகாமுக்கு தெரிவானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண அமெச்சூர் விளையாட்டுச்சங்கத் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் சர்வதேச அமெச்சூர் விளையாட்டு சம்மேளனம், ஆசியா அமெச்சூர் விளையாட்டுச்சங்கம் ஆகியவற்றின் ஆதரவிலான பயிற்சிமுகாமில் கலந்து கொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாண்டு ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி முகாமில் திரு. சிவலிங்கம் இலங்கையின் பிரதிநிதியாக இலங்கை அமெச்சூர் விளையாட்டுச்சங்கத்தின் சார்பில் கலந்துகொள்கிறார்.

கடந்த வருடம் மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக் ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டு பயிற்சி முகாம்களிலும் இலங்கையின் பிரதிநிதியாக திரு. சிவலிங்கம் கலந்துகொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய பயிற்றுனரான இவர் இலங்கை அமெச்சூர் விளையாட்டுச்சங்கத்தின் உபதலைவராவார். (து-இ)

## ஏகமனதாகத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

திரு. கா சி. செ. முத்துக்குமாரு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அபிவிருத்தி சங்கப் பொதுக்காரியதரிசியாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் பிரசித்தநொத்தாரிசும் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளரும் யாழ்ப்பாணம் ஏசி. எஸ். தொகுதி ஸ்தாபனங்களின் இயக்குனரும். சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தின் ஆயுள் உறுப்பினரும் இசைவளர்ச்சிசங்கம் இலங்கை இசைச்சங்கம்! யாழ் நுண்கலைக்கழகம் ஆகியன இவரால் தோற்றுவிக்கப்பட்டன.

பிரபல முத்திரை சேகரிப்பாளராகிய இவர் யாழ்ப்பாணத்தில் முத்திரை சேகரிப்பை பல பாடசாலைகளிலும் புகுத்தியவர் என்பது சுட்டுக்குறிப்பிடத்தக்கது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# வாக்காளர் அட்டைகளை வியாழன்வரை பெறுவிடில்...

(கொழும்பு)

இம்மாதம் 28ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளைப் பெறாத வாக்காளர்கள் தமது பகுதி தபால் அலுவலகங்களுக்கு அல்லது உபதபால் அலுவலகங்களுக்குச் சென்று தமது வாக்காளர் அட்டை பற்றி விசாரிக்குமாறு தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல் நடைபெறும் தினமான ஜூன் 4ம் திகதி வரை வாக்காளர் அட்டைகள் அந்தந்த தபாற்கந்தோர்களில் வைக்கப்பட்டிருக்கும் என்றும் இதுவரை அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தபாற்கந்தோர்களுக்குச் சென்று தேசிய அடையாள அட்டைகளைக் காட்டி அவற்றைப்பெற்றுக் கொள்ளலாமென்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

1979ம் ஆண்டு ஜூன்மாதம் 1ம் திகதிக்குப்பின் தமது வசிப்பிடத்தை மாற்றிக் கொண்டவர்கள் இத்திகதிக்கு முன்னர் வசித்த இடத்தின் தபாற்கந்தோருக்குச் சென்று தேர்தல் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ)

# தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது?

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ஏ. தியாகராசாவை யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று அவரது மனைவி, மகள் ஆகியோர் மட்டும் பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று மாலை பெருந்திரளான ஆதரவாளர்கள் நாலாவது வாட்டின் வெளியில் காணப்பட்டனர்.

நெஞ்சிலும் முகத்திலும், பிளாஸ்டர் போடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் வாயினாலேயே மூச்சுவிட்டுக் கொண்டிருப்பதாகவும் மயக்க நிலைதெளிந்திருப்பதாகவும் திருமதி தியாகராசா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினமிரவு தங்களது வீட்டுத் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் நேற்று அதிகாலை 3 மணிக்கு ஆஸ்பத்திரியுடன் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றபோது இது தெரியவந்ததாகவும் திருமதி தியாகராசா தெரிவித்தார்.

நேற்றுக்காலையிலும் பார்க்க நிலைமை திருந்தியடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

5ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜீப் சாரதிக்கு தொண்டையில் கண்ணாடித் துண்டு வெட்டியிருந்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஈ)

# மீனவர்களைக் காணவில்லை

(மன்னார்)

இரண்டு மீனவர்களுடன் கடலில் பழுதடைந்திருந்த படகு ஒன்று காணாமற்போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பேசாலையைச் சேர்ந்த ராயப்பு என்பவர் இரு மீனவர்களுடன் படகு ஒன்றில் கடலில் மீன் பிடிக்கச்சென்றார் என்றும் கடலில் நீண்ட தூரம் சென்ற படகு இயந்திரக் கோளாறு காரணமாக இயங்காது போகவே ராயப்பு, கரைக்குத் திரும்பிய வேறு ஒரு படகில் கரைக்கு வந்தாரென்றும் மற்றைய இரு மீனவர்களும் பழுதடைந்த படகில் கடலிலேயே இருந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது; ராயப்பு பழுதடைந்தபடகைத் திருத்துவதற்கான உபகரணங்களுடன் படகு நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்குச் சென்றபோது பழுதடைந்த படகையும், படகிலிருந்த இருமீனவர்களையும் காணவில்லையென்றும் கடற்பிராந்தியத்தில் பலத்த தேடுதல் வேட்டை நடத்தியும் இதுவரை பழுதடைந்த படகும், இரு மீனவர்களும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மன்னார் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# இந்த ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

(புலோலி)

பாடசாலைகளில் வசதிக்கட்டணத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியநியமனம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் விரைவில் இவர்களின் குறைபாடுகள் தீர்த்துவைக்கப்படுமென்றும் கல்வி அமைச்சர் திரு ரனில்விக்கிரமசிங்கா அகில இலங்கை தற்காலிக ஆசிரியர் சங்கத்திற்கு உறுதியளித்துள்ளார்.

அண்மையில் அகிலஇலங்கை தற்காலிக ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. கே. என். ஆர். கணேசமூர்த்தி பாடசாலைகளில் வசதிக்கட்டண ஆசிரியர்களாகப் பணிபுரிவோரது குறைபாடுகள் பற்றி கல்விஅமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்காவுக்கு விளக்கிக்கூறியதுடன் அமைச்சரிடம் இக்குறைபாடுகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்தே அமைச்சர் ரனில்விக்கிரமசிங்கா சகலபாடசாலைகளிலும் வசதிக்கட்டணத்தில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறி விரைவில் இவர்களின் குறைபாடுகள் தீர்த்துவைக்கப்படுமென்றும் உறுதியளித்தார்.

## தேசிய நாடகவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாடகப்போட்டி 1981க்கான நாடகப் பிரதிகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி பல நாடகமன்றங்களின் வேண்டுகோளுக்கிணங்க மே மாதம் 15ம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 16ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதென்று தமிழ்அலுவல்கள்பணிப்பாளர் திரு ஆ. பாஸ்கரதாஸ் அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்
### கார்த்திகேசு தம்பாப்பிள்ளை

அளவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு தம்பாப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் சிதம்பரபூபதியின் அன்புக் கணவரும் பிறிதரன் (லண்டன்), கெங்காதரன் (நீர்ப்பாசன இலாகா, கிளிநொச்சி), காலம் சென்ற சுறிதரன் பத்மினி (லண்டன்), மாலதி (மருத்துவக்கல்லூரி, பேராதனை), ஸ்ரீரங்கன் (பொறியியல் கல்லூரி, சென்னை), நந்தினி (மருத்துவக்கல்லூரி யாழ்ப்பாணம்), தசரதன் (மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிதேவி, (லண்டன், சுந்தரலட்சுமி, ரெறி (லண்டன்) ஆகியோரின் மாமனும், வினிதா, ஷாரங்கன் ஆகியோரின் பாட்டனும், வளளிநாகியின் சகோதரரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 27-5-81) நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு அளவெட்டியில் நடைபெறும். (9300)

## முன்னாள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கது.

### தேர்தல் கூட்டம்

வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள ருத்தலடி எனுமிடத்தில் ஐக்கியதேசியகட்சி தேர்தல்ப்ரசாரக்கூட்டம் நேற்று முன் தினமிரவு நடைபெற்றது இக் கூட்டத்தில் கலாசார அமைச்சர் திரு. ஹுருள்லேயும் அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி விஜயக்கோனும் உரையாற்றியபின் அமைச்சர்கள் சென்றுவிட்டனர் என்றும் அமைச்சர்களுடன் பொலிசாரும் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது.

### 'ஜீப்பில்' ஏறியதும் ....

அதன்பின்னரும் கூட்டம் சிறிதுநேரம் நடந்து முடிவடைந்தது.

காரைநகரிலிருந்து லொறி ஒன்றில் கூட்டத்திற்கு வந்திருந்த ஆதரவாளர்களை லொறியில் ஏற்றியபின்னர் இரவு பத்தரை மணியளவில் வேட்பாளர் தியாகராசா 'ஜீப்பில்' ஏறிஅமர்ந்ததும் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் அச்சமயம் சென்றுவிட்டனராம்.

### சைக்கிளில் வந்த இளைஞர்

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் சைக்கிளில் வந்து மூன்று அல்லது நான்கு தடவை, வேட்பாளர் தியாகராசாவை நோக்கி சுட்டுவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. உடனடியாக அவர் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார். (ஈ)

## குண்டு
(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த ஜீப் சாரதியான அனுரா ஜெயவர்த்தன 5ம் வார்டடில் அனுமதிக்கப்பட்டுள்ளார், அவருக்கு தொண்டையில் காயமேற்பட்டுள்ளது. காயமடைந்த கே கணேசலிங்கமும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று நண்பகல்வரை எவரும் வார்ட்டுக்குள் செல்ல அனுமதிக்கப் படவில்லை. திருமதி தியாகராசா, பிள்ளைகள் அவரது உறவினர்கள் யாவரும், வார்ட்டிற்கு வெளியில் நின்றனர்.

ஆஸ்பத்திரி பிரதான வாசலில் "4ம் வார்ட்டில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்றுஅறிவித்தல் போடப்பட்டிருந்தும், ஆதரவாளர்கள், 4ம்வார்ட்டை முற்றுகையிட்டனர். பொலிஸார் அவர்களை அங்கிருந்து செல்லுமாறு தெரிவித்தனர். (ஈ

## வவனியா மாவட்டம்:
# உடல்நலம்பற்றிய பாசறைப் பயிற்சி

(புளியங்குளம்)

வவனியா மாவட்டத்தில் உள்ள சகலசிறிய பாடசாலை ஆசிரியர்களுக்குமான உடல் நலம் பற்றிய பாசறைப்பயிற்சி வகுப்புக்கள், ஜூன் மாத நடுப்பகுதியில் வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது இதற்கான ஏற்பாடுகளை வவனியாமாவட்டப் பிரதேசக் கல்விப்பணிப்பாளர்திரு. எஸ் பி சிவபாதம் செய்துள்ளார்.

இப் பயிற்சி வகுப்புக்களை 'யூனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை சௌக்கியதான இயக்கமும், கல்வி அமைச்சும் இணைந்து நடாத்த முன்வந்துள்ளது

இதில் பங்குபெறும் ஒவ்வொரு சிறிய பாடசாலையில் இருந்தும் ஒரு ஆசிரியரும் அப்பாடசாலை அபிவிருத்தியில் அதிக ஈடுபாடுள்ள கிராமத்தவர் ஒருவரும் தெரிவுசெய்யப்படுவர்.

பங்குபெறுவோருக்குச் சான்றிதழ்கள் வழங்குவதுடன் காலக்கிரமத்தில் 'யூனிசெப்' நிறுவனம் முதலுதவிப்பெட்டிகளையும் வழங்குமென்றும் பயிற்சிவகுப்புக்களில் பங்குபற்றுவோருக்குரிய போக்குவரத்து விசேடபடிகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும்தெரியவருகிறது.

# "முஸ்லிம்கள் கூட்டணியை ஆதரிக்க வேண்டும்"
## காங்கிரஸ் அங்கத்தவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"நெருக்கடியானதொரு நேரத்தில், அபிவிருத்திசபைத் தேர்தல் நடைபெறுகிறது. இத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் அனைவரும் தமிழர்விடுதலைக் கூட்டணியை ஆதரிக்க வேண்டும்" என்று யாழ் மாநகரசபை தமிழ்க்காங்கிரஸ் அங்கத்தவர் ஜனாப் எம்.காசிம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் கல்லூரி வீதியில் நேற்றுமுன்தினம் இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. திறப்புவிழாவினைத் தொடர்ந்து சட்டத்தரணி ஜனாப் எம். எம். இமாம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாப் எம். காசிம் தொடர்ந்து பேசுகையில், "எங்களது தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியது கூட்டணி மட்டும் தான். கூட்டணியை ஆதரித்து முஸ்லிம் மக்கள் வாக்களிக்க வேண்டும். தமிழ் மக்கள் தங்களது ஒற்றுமையைக்காட்ட வேண்டும். நான் பதவியை எதிர்பார்ப்பவன் அல்ல பதவி பறிபோனாலும் பரவாயில்லை. எனது கருத்தை இங்கு வலியுறுத்துகின்றேன்" என்றார்.

பொம்மைவெளியில் முஸ்லிம் பெண்களுக்கு கைத்தொழில்வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று யாழ் எம். பிக்கு ஜனாப் காசிம் விடுத்த கோரிக்கையை யாழ் எம். பி. ஏற்றுக்கொண்டார்.

இக் கூட்டத்தில் சட்டத்தரணி எம். ஆனைசுந்தரம், ஜனாப் மொஹிதீன்பிச்சை, யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் பேசினர்.

# யாழ். இரவுச்சந்தை:
## அமைச்சர் இன்று திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரவுச் சந்தையை இன்றுமாலை கப்பல் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி திறந்துவைப்பார்.

. யாழ் மூனீஸ்வர வீதியில் யாழ் மாநகரசபைக்குரிய நிலத்தில் விற்பனைஅபிவிருத்தித் திணைக்களம் இந்த இரவுச் சந்தையைஅமைத்துள்ளது (ஈ

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் மே 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registere'd as a News Paper at the General Post Office Sri Lanka under No. QB 100236/81. Eelanaadu P O Box 49 Telegram: 'Eelanaadu Phone: 389—8126